©
தமிழ்நாடு அரசு
2011

கையெழுத்துத் தொடர்

# நிதி(ஓய்வூதியம்)த் துறை

**அரசாணை எண்:141, நாள் : 19.05.2011**

*(வைகாசி–5, திருவள்ளுவர் ஆண்டு 2042)*

ஓய்வூதியம் – அரசுப் பணியிலிருந்து ஓய்வூதியத் திட்டம் இல்லாத டான்சி உள்ளிட்ட அரசு பொதுத் துறை நிறுவனங்களில் ஈர்க்கப்பட்டு ஓய்வு பெற்று மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

படிக்கவும்:

1. அரசாணை எண்.42, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்.07.02.2011
2. மத்திய அரசின் குறிப்பாணை எண். 4/38/2008, P&PW (D), பணியாளர் துறை, நாள் 15.9.2008

**ஆணை:**

அரசுத் துறைகளில் பணியாற்றிய பின்னர், டான்சி நிறுவனம் உள்ளிட்ட ஓய்வூதியத் திட்டம் இல்லாத அரசு பொதுத் துறை நிறுவனங்களில் நிரந்தரமாக ஈர்க்கப்பட்டவர்கள், அவ்வாறு நிறுவனங்களில் ஈர்க்கப்பட்ட நேரத்தில் அவர்கள் அரசுப் பணியாற்றிய காலத்திற்கான ஓய்வூதியத்தினை ஒட்டுமொத்தமாக (100% commutation of pension) பெற்றனர். அவர்கள் பணியாற்றிய பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அரசுத் துறையில் பணியாற்றிய காலத்திற்கான ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பங்கினை தற்போது ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். மேலும், அவர்கள் பெற்று வரும் ஓய்வூதியத்திற்கு அரசு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்குவது போல் முழு அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகின்றது.

2. தற்போது இவ்வகை ஓய்வூதியதாரர்களிடமிருந்து, பிற அரசு ஓய்வூதியதாரர்களுக்கு பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூடுதல் ஓய்வூதியம் வழங்கப்படுவது போல, தங்களுக்கும் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என கோரிக்கை அரசால் பெறப்பட்டது.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மத்திய அரசின் குறிப்பாணையில் மத்திய அரசில் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியம் பெறும் இவ்வகை ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

4. இக்கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்து அரசுப் பணியிலிருந்து ஓய்வூதியத் திட்டம் இல்லாத அரசு பொதுத் துறை நிறுவனங்களில் ஈர்க்கப்பட்டு, பின்னர் ஓய்வு பெற்று, அரசுப் பணிக் காலத்திற்கு மட்டும் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மத்திய அரசின் குறிப்பாணை அடிப்படையில், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசின் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல 80 வயதிற்கு

மேற்பட்ட மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி, மேற்குறிப்பிட்ட ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் |
|---|---|---|
| 1 | 80 முதல் 84 வரை | மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத்தில் 20% |
| 2 | 85 முதல் 89 வரை | மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத்தில் 30% |
| 3 | 90 முதல் 94 வரை | மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத்தில் 40% |
| 4 | 95 முதல் 99 வரை | மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத்தில் 50% |
| 5 | 100 மற்றும் அதற்கு மேல் | மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத்தில் 100% |

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை– 9 / 18 / 35/ மதுரை.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.

__நகல் பெறுநர்:__
நிதி (பொ.மா.க. / ஊ.கு. / வரவு செலவு– பொது II /
வரவு செலவு–பல்வகை)த் துறை, சென்னை– 600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை– 600 006.
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை– 600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை– 600 108.
மேலாண்மை இயக்குநர், டான்சி, சென்னை – 600 032
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில் நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்)
பொதுத்துறை வங்கிகளின் அனைத்துத் தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் (ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006 மூலமாக)
அனைத்து பொதுத் துறை வங்கிகள் (ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006 மூலமாக.)
அரசுச் செயலாளர், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத் துறை, பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம், இந்திய அரசு, புது டெல்லி.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்